**<u>விழுப்புரம் மாவட்டம், கோட்டக்குப்பம் நகராட்சியின் நகர்மன்ற தலைவர் அவர்களின் தலைமையில் நடைபெற்ற 20.05.2022ம் தேதிய அவசரகூட்டத்தில் 19, 20, 21, 22, 23, 24, 25, 26, 27, 28, 29, 30, 31, 32, 33, 34, 35, 36, 37ம் எண்ணுள்ள தீர்மானத்தின் உண்மை நகல்</u>**

**<u>பொருள் எண்.01</u>**

அரசாணை (நிலை) எண்.52. நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி4) துறை நாள்.30.03.2022 மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர் சுற்றறிக்கை ந.க.எண்.40032/2012/ஆர்1, நாள்.01.04.2022.

தமிழக அரசால் அமைக்கப்பட்ட சொத்துவரி சீராய்வு செய்வதற்கான குழு பல்வேறு காரணிகளை ஆராய்ந்து தற்போது சொத்துவரி சீராய்வு செய்வது அவசியம் என அரசிற்கு பரிந்துரைத்துள்ளது.

15–வது மத்திய நிதி ஆணையம், 2022–2023ம் ஆண்டு முதல் உள்ளாட்சி அமைப்புகளுக்கான மான்யம் பெறுவதற்கு, மொத்த ஆண்டு மதிப்பில் சொத்துவரி விகிதம் (Floor rate i.e. Rate of Taxation) எவ்வளவு என அறிவிக்கை வெளியிட வேண்டும் எனவும், மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சிக்கு ஏற்றவாறு சொத்துவரி வரி வசூலில் முன்னேற்றம் காண்பிக்க வேண்டும் எனவும் நிபந்தனைகள் விதித்துள்ளது. மேலும் தூய்மை இந்தியா திட்டம் 2.0 மற்றும் அம்ரூட் 2.0 ஆகிய திட்டங்களுக்கு மானிய நிதி பெறுவதற்கு சொத்துவரி / காலிமனை வரி சீராய்வு செய்வது அவசியமாகிறது.

அரசாணை(நிலை) எண்.73 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.19.07.2018 மற்றும் அரசாணை(நிலை) எண்.76 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள். 26.07.2018 ஆகியவற்றில் சொத்துவரி / காலிமனை வரி பொது சீராய்வு மேற்கொள்ள ஆணையிடப்பட்டு, பின்பு அரசாணை(நிலை) எண்.150 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள். 19.11.2019ன்படி சொத்துவரி சீராய்வானது நிறுத்தி வைக்கப்பட்டு, சொத்துவரி / காலிமனைவரி சீராய்வு மேற்கொள்வதற்கான வரிகாட்டுதல்கள் வழங்க குழுவும் அமைக்கப்பட்டது. மேலும் இக்குழுவானது சொத்துவரி / காலிமனைவரி சீராய்வு செய்வதற்கான பரிந்துரைகள் வழங்குவதற்கு முன்பு, சந்தை மதிப்பு குறியீடு, பணவீக்கம், செலவு பணவீக்க குறியீடு, மொத்த உள்நாட்டு உற்பத்தி போன்றவற்றை பரிசீலித்து, பொருளாதார குறியீடுகள் உயர்த்துள்ள நிலையில் சொத்துவரியில் எந்த உயர்வும் இல்லாத்தோடு, உள்ளாட்சி அமைப்புகளின் சொந்த வருமானத்திலும் எந்த உயர்வும் இல்லாமல் உள்ளதாகவும், மொத்த வருமானத்தில் சொந்த வரும்மானத்தின் பங்கு பெருமளவு குறைந்துள்ளதாகவும் அறிக்கை வெளியிட்டுள்ளது.

தற்போது பொருளாதார குறியீடு உயர்த்துள்ளதற்கு ஏற்ப, நகராட்சிகளின் நிர்வாகச் செலவினம் பலமடங்கு உயர்த்துள்ளது. மேலும் நகராட்சிகளில் அதிகரித்துள்ள நிதித்தேவை, பொது மக்களுக்கு வழங்கப்பட வேண்டிய அடிப்படை வசதிகள், 15வது மத்திய நிதிக்குழுவின் மான்யம் மற்றும் இதர ஒன்றிய அரசின் திட்டங்களுக்கான நிதி பெறுவதற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள தகுதிகள் போன்றவற்றை கருத்திற்கொண்டும் தமிழ்நாட்டிலுள்ள நகராட்சிகளில் கீழ்க்கண்டவாறு சொத்துவரி / காலிமனைவரி சீராய்வு செய்யலாம் என சொத்துவரி சீராய்வு மேற்கொள்வதற்கான வழிகாட்டுதல் குழு பரிந்துரைத்துள்ளது.

சொத்துவரி / காலிமனை வரி சீராய்வு செய்வதற்கான குழுவின் பரிந்துரைகள் மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் வளர்ச்சிக்கு தேவைப்படும் நிதி ஆகியவற்றை கருத்திற்கொண்டு 2022 -2023 முதலாம் அரையாண்டு (01.04.2022) முதல் சொத்துவரி பொது சீராய்வு செய்ய வேண்டும்.

நகராட்சி பகுதிகளில் கட்டப்படும் குடியிருப்பு கட்டடங்களுக்கு அவற்றின் அமைவிடம், கட்டுமானத்தின் தன்மை மற்றும் பயன்பாடு ஆகியவற்றின் அடிப்படையில் கட்டடங்களின் பரப்பளவுக்கு ஏற்றவாறு 4 வகைகளாக பிரித்து வெவ்வேறு மண்டல மதிப்புகள் நிர்ணயம் செய்து சொத்துவரி / காலிமனைவரி சீராய்வு செய்ய வேண்டும்.

சொத்து வரி காலிமனைவரி சீராய்வு செய்வதற்கான குழுவின் பரிந்துரைகள் / (நிலை) அரசாணை அரசால் ஏற்றுக்கொள்ளப்பட்டு எண்.52 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி4) துறை நாள்.30.03.2022 மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர் சுற்றிக்கை ந.க.எண்.40032/2012/ஆர்1, நாள்.01.04.2022 ஆகியவற்றில் கீழ்க்கண்டவாறு அடிப்படை மதிப்பு நிர்ணயம் செய்ய தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்காணும் அரசாணை (நிலை) எண்.52 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி4) துறை நாள்.30.03.2022 மன்ற பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**<u>சொத்துவரி:</u>**

**குடியிருப்பு கட்டடங்கள் (Residential Building)**

| பரப்பளவு (ச.அடி) | உயர்வு செய்வதற்கான காரணி |
|---|---|
| <600= | 1.25 |
| 1200-601 | 1.5 |
| 1800-1201 | 1.75 |
| >=1800 | 2 |

**குடியிருப்பு அல்லாத கட்டடங்கள் (Non– Residential Building)**

| வகைப்பாடு | உயர்வு செய்வதற்கான காரணி |
|---|---|
| தொழிற்சாலைகள் | 1.75 |
| வணிக பயன்பாட்டு கட்டடங்கள் | 2 |
| சுயநிதி பள்ளி மற்றும் கல்லூரி கட்டடங்கள் | 1.75 |

**மண்டல அடிப்படை மதிப்பு நிர்ணயம் செய்வது சம்மந்தமாக மேற்கண்ட பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள உயர்வு காரணிகள் கீழ்கண்டவாறு விவரிக்கப்படுகிறது :**

1. 600 சதுர அடிக்கும் குறைவான பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 25% சொத்துவ உயர்வு செய்யப்பட வேண்டும்.
2. 601 முதல் 1200 சதுர அடி வரை பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 50% சொத்துவ உயர்வு செய்யப்பட வேண்டும்.
3. 1201 முதல் 1800 சதுர அடி வரை பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 75% சொத்துவ உயர்வு செய்யப்பட வேண்டும்.
4. 1800 சதுர அடிக்கு அதிகமாக பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு

100% சொத்துவரி உயர்வு செய்யப்படவேண்டும்.

5. வணிகப் பயன்பாட்டு கட்டடங்களுக்கு தற்போதுள்ள சொத்துவரியில் 100% சொத்வரி உயர்வு செய்யப்பட வேண்டும்.
6. தொழிற்சாலை பயன்பாட்டு கட்டடம் மற்றும் சுய நிதி பள்ளி மற்றும் கல்லூரி கட்டடங்களுக்கு தற்போதுள்ள சொத்துவரியில் 75% சொத்துவரி உயர்வு செய்யப்பட வேண்டும்.

**காலிமனை வரி சீராய்வு:**

காலிமனை வரிவிதிப்பிற்கு 1 சதுர அடி நிலத்திற்கு தற்போதுள்ள அடிப்படை மதிப்பு 100 சதவீதம் உயர்வு செய்து காலிமனை வரி பொது சீராய்வு செய்யப்பட வேண்டும். மேலும் சொத்து வரிவிதிப்பு செய்யும் போது கட்டத்தின் பரப்பளவிற்கு இரண்டு மடங்கிற்கு மேல் உள்ள காலியிடத்திற்கு சொத்து வரியுடன் சேர்த்து காலிமனை வரி வரிவிதிப்பு செய்யப்பட வேண்டும்.

**தன்னிச்சையான வருடாந்திர சொத்துவரி சீராய்வு :**

ஏற்கனவே உள்ள சொத்துவரி / காலிமனை வரியில், ஆண்டுதோறும் 6% உயர்வு அல்லது கடந்த 5 ஆண்டுகளின் மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தியின் (GSDP) சராசரி வளர்ச்சி வீதம் இவற்றில் எது அதிகமோ அதன் அடிப்படையில் ஒவ்வொரு ஆண்டும் சொத்துவரி / காலிமனை வரி உயர்வு செய்து சொத்துவரி சீராய்வு செய்யப்பட வேண்டும்.

அதுபோலவே, தற்போது வரை மண்டல அடிப்படை மதிப்பு நிர்ணயம் செய்யப்படாமல் விடுபட்டுள்ள சாலைகள், தெருக்கள், சந்துகள் போன்றவை அவற்றின் அமைவிடங்களுக்கு ஏற்றவாறு பட்டியலிட்டு மண்டலங்களும், மண்டல மதிப்புகளும் நிர்ணயம் செய்யப்பட வேண்டும்.

மேலும் கோட்டக்குப்பம் நகராட்சியில் தற்போதுள்ள நிலையில் கீழ்கண்டவாறு கடன் தொகை / நிநித்தேவை உள்ளது.

| வ. எண். | செலவின வகைப்பாடு | தற்போதுள்ள நிலையில் தேவைப்படும் நிதி Current Liabilities |
|---|---|---|
| 1 | செலுத்தப்பட வேண்டிய நிலுவை மின்கட்டணம் | 14.40 |
| 2 | பிற துறைகளுக்கு செலுத்த வேண்டிய நிலுவைத் தொகை விபரம் | 9.68 |
| 3 | திரும்ப செலுத்த வேண்டிய கடன் நிலுவை விபரம் (டுபிட்கோ, டுபிசெல், பிற) | – |
| 4 | பணியாளர்களுக்கு வழங்கப்படவேண்டிய ஓய்வுக்கால பணப்பயன் மற்றும் தற்போது பணிபுரியும் ஓய்வூதியம் மற்றும் தற்போது பணிபுரியும் பணியாளர்களுக்கு வழங்க வேண்டிய சேமநல நிதி, நகராட்சியின் பங்குத்தொகை மற்றும் பிற பணப்பயன்கள் (நிலுவைத் தொகை) | 20.22 |
| | **மொத்தம்** | **44.30** |

விலைவாசி உயர்வு, பணியாளர்களின் ஊதிய உயர்வு, பொதுமக்களுக்கு செய்ய வேண்டிய அடிப்படை தேவை மற்றும் நகராட்சியில் ஏற்படுத்தப்பட்டுள்ள அடிப்படை

கட்டமைப்புகளை மேம்படுத்தி பராமரிப்பு செய்தல் போன்றவற்றிற்கு தேவைப்படும் கூடுதல் செலவினம், நகராட்சி செலுத்த வேண்டிய கடன் தொகை மற்றும் பிற துறைகளுக்கு செலுத்த வேண்டிய நிலுவைத்தொகை ஆகியவற்றை கருத்தில் கொண்டும், பொதுமக்களுக்கு சிறப்பான சேவைகளை அளிக்க ஏதுவாகவும், மேற்கண்ட அரசாணையில் அறிவுறுத்தியுள்ளவாறும், தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம், 1920 பிரிவு 81–A மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் சுற்றறிக்கை ந.கஎண்.40032/2012/ஆர்1, நாள்.01.04.2022 ஆகியவற்றில் குறிப்பிடப்பட்டுள்ள வழிமுறைகள் பின்பற்றியும், கோட்டக்குப்பம் நகராட்சியில் கீழ்கண்டவாறு சொத்துவரி / காலிமனைவரி உயர்வு செய்து பொது சீராய்வு மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்காக பொருள் வைக்கப்படுகிறது.

1. 600 சதுர அடிக்கும் குறைவான பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 25% சொத்துவ உயர்வு செய்யப்பட வேண்டும்.
2. 601 முதல் 1200 சதுர அடி வரை பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 50% சொத்துவ உயர்வு செய்யப்பட வேண்டும்.
3. 1201 முதல் 1800 சதுர அடி வரை பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 75% சொத்துவ உயர்வு செய்யப்பட வேண்டும்.
4. 1800 சதுர அடிக்கு அதிகமாக பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 100% சொத்துவரி உயர்வு செய்யப்படவேண்டும்.
5. வணிகப் பயன்பாட்டு கட்டடங்களுக்கு தற்போதுள்ள சொத்துவரியில் 100% சொத்வரி உயர்வு செய்யப்பட வேண்டும்.
6. தொழிற்சாலை பயன்பாட்டு கட்டடம் மற்றும் சுய நிதி பள்ளி மற்றும் கல்லூரி கட்டடங்களுக்கு தற்போதுள்ள சொத்துவரியில் 75% சொத்துவரி உயர்வு செய்யலாம்.
7. காலிமனை வரிவிதிப்பிற்கு 1 சதுர அடி நிலத்திற்கு தற்போதுள்ள அடிப்படை மதிப்பு 100 சதவீதம் உயர்வு செய்து காலிமனை வரி பொது சீராய்வு செய்யலாம்.
8. ஏற்கனவே உள்ள சொத்துவரி / காலிமனைவரியில் ஆண்டு தோறும் 6 சதவீதம் உயர்வு அல்லது கடந்த 5 ஆண்டுகளின் மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தியின் (GSDP) சராசரி வளர்ச்சி வீதம் இவற்றில் எது அதிகமோ அதன் அடிப்படையில் ஒவ்வொரு ஆண்டும் சொத்துவரி / காலிமனை வரி உயர்வு செய்து சொத்துவரி சீராய்வு செய்யலாம்.

மேலும் தற்போது வரை மண்டல அடிப்படை மதிப்பு நிர்ணயம் செய்யாமல் விடுபட்டுள்ள சாலைகள் / தெருக்கள் / சந்துகள் ஆகியவற்றின் பட்டியல் இணைக்கப்பட்டுள்ளது. ஒரு மனைப்பிரிவில் பல குறுக்கு சாலைகள் அமைந்துள்ள நிலையில், ஒட்டு மொத்த மனைப்பிரிவையும் ஒரே தெருவாக மனைப்பிரிவின் பெயரில் சொத்துவரி விதிப்பு பதிவேட்டில் பதியப்பட்டுள்ளது. இம்மனைப்பிரிவில் அமைந்துள்ள பல்வேறு தெருக்கள் / சாலைகள் / குறுக்கு சந்துகள் தனித்தனித் தெருக்களாக அடிப்படை மண்டல மதிப்பு மாறாமல் அதே மண்டல அடிப்படை மதிப்பில் சொத்து வரி விதிப்பு பதிவேட்டில் பதிவு செய்ய நகர்மன்ற தீர்மான எண்.10, நாள்.11.04.2022ல் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.

மேற்காணும் விவரப்படி சொத்துவரி மற்றும் காலிமனை வரி பொது சீராய்வு 01.04.2022 முதல் ஏற்கனவே உள்ள மண்டல மதிப்பில் உயர்வு செய்வதற்கான காரணி நிர்ணயம் செய்யப்பட்டதை 13.04.2022ல் தினத்தந்தி நாளிதழிலும் மற்றும தினமணி நாளிதழிலும், வெளியிடப்பட்டும், நகராட்சி அலுவலக விளம்பர பலகையில் ஒட்டி விளம்பரப்படுத்தியும், சொத்துவரி / காலிமனை வரி பொது சீராய்வு உயர்வு குறித்து பொதுமக்களிடம் ஆலோசனைகள் மற்றும் ஆட்சேபனைகள் ஏதும் இருப்பின் இவ்வறிக்கை வெளியிடப்பட்ட 30 தினங்களுக்குள் (13.04.2022 முதல் 13.05.2022வரை ) எழுத்து பூர்வமாக நகராட்சி அலுவலகத்தில் தெரிவிக்கலாம் அல்லது நகராட்சி அலுவலக மின்னஞ்சல் commr.kottakuppam@tn.gov.in என்ற முகவரியில் அனுப்பிவைத்திட பொது சீராய்வு குறித்த அறிவிக்கை விளம்பரம் செய்யப்பட்டது. சொத்துவரி / காலிமனை வரி பொது சீராய்வு மேல்கொள்வதை குறித்து வழங்கப்பட்ட கால அவகாசத்திற்குள் மனுக்கள் ஏதும் வரப்பெறவில்லை.

ஏற்கனவே உள்ள மண்டலம் மதிப்பில் உயர்வு செய்வதற்கான காரணியின் படி கீழ்கண்டவாறு சொத்துவரி / காலிமனை வரிக்கு மண்டல மதிப்பு நிர்ணயம் செய்யப்பட்டதை திருத்தி A, B, மற்றும் C என அடிப்படை மண்டல மதிப்பு நிர்ணயம் செய்ய நகரமன்ற தீர்மான எண்.10, நாள்.11.04.2022ன்படி நிர்ணயம் செய்துள்ளதை இறுதி செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**சொத்து வரி**

| வ.எண் | மண்டலம் | தற்போழுது உள்ள மண்டல மதிப்பு சதுர அடிக்கு ரூ. | RATE OF TAX |
|---|---|---|---|
| 1 | A | 0.70 | 21% |
| 2 | B | 0.50 | |
| 3 | C | 0.30 | |

**01.04.2022 முதல் புதிய வரி விதிப்புகளுக்கு உயர்வு செய்யப்படவுள்ள சொத்து வரி மண்டல மதிப்பு**

| மண்டலம் | தற்போதைய மதிப்பீடு (ரூபாய்) | 600 சதுர அடிக்கும் குறைவான பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 25% சொத்துவிரி உயர்வு (1 சதுர அடிக்கு ரூபாய்) | 601–1200 சதுர அடிக்கும் குறைவான பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 50% சொத்துவிரி உயர்வு (1 சதுர அடிக்கு ரூபாய்) | 1201–1800 சதுர அடிக்கும் குறைவான பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 75% சொத்துவிரி உயர்வு (1 சதுர அடிக்கு ரூபாய்) | 1800 சதுர அடிக்கு மேல் பரப்பளவு உள்ள குடியிரு கட்டடங்களுக்கு 100% சொத்துவிரி உயர்வு (1 சதுர அடிக்கு ரூபாய்) | விணிகப் பயன்பாட்டுக்கு கட்டடங்களுக்கு தற்பொது உள்ள சொத்துவிரியில் 100% சொத்துவரி உயர்வு (1 சதுர அடிக்கு ரூபாய்) | தொழிற்சாலை பயன்பாட்டு கட்டடம் மற்றும் சுயநிதி பள்ளி மற்றும் கல்லூரி கட்டடங்களுக்கு தற்பொது உள்ள சொத்துவிரியில் 75% சொத்துவரி உயர்வு (1 சதுர அடிக்கு ரூபாய்) |
|---|---|---|---|---|---|---|---|
| A | 0.70 | 0.90 | 1.05 | 1.25 | 1.40 | 1.40 | 1.25 |
| B | 0.50 | 0.65 | 0.75 | 0.90 | 1.00 | 1.00 | 0.90 |
| C | 0.30 | 0.40 | 0.45 | 0.55 | 0.60 | 0.60 | 0.55 |

**காலிமனைவரி மண்டல மதிப்பு**

| மண்டலம் | தற்போதைய மதிப்பீடு (ரூபாய்) | பொது சீராய்வின் படி 100% காலிமனை உயர்வு (1 சதுர அடிக்கு ரூபாய்) |
|---|---|---|
| A | 0.25 | 0.50 |
| B | 0.25 | 0.50 |
| C | 0.25 | 0.50 |

**அலுவலக குறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. சொத்துவரி பொது சீராய்வு அறிக்கையினை மாவட்ட அரசிதழில் பிரசுரம் செய்திட மன்றம் அனுமதிக்கலாம்.
3. மேலே அரசாணைகள் மற்றும் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கையில் வழங்கியுள்ள வழிகாட்டுதலின் படி 01.04.2022 தேதி முதல் கீழ்க்கண்டவாறு சொத்துவரி / காலிமனை வரி உயர்வு செய்திட கோட்டக்குப்பம் நகராட்சியில் அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
    1. 600 சதுர அடிக்கும் குறைவான பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 25% சொத்துவ உயர்வு செய்யப்பட வேண்டும்.
    2. 601 முதல் 1200 சதுர அடி வரை பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 50% சொத்துவ உயர்வு செய்யப்பட வேண்டும்.
    3. 1201 முதல் 1800 சதுர அடி வரை பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 75% சொத்துவ உயர்வு செய்யப்பட வேண்டும்.
    4. 1800 சதுர அடிக்கு அதிகமாக பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 100% சொத்துவரி உயர்வு செய்யப்படவேண்டும்.
    5. வணிகப் பயன்பாட்டு கட்டடங்களுக்கு தற்போதுள்ள சொத்துவரியில் 100% சொத்வரி உயர்வு செய்யப்பட வேண்டும்.
    6. தொழிற்சாலை பயன்பாட்டு கட்டடம் மற்றும் சுய நிதி பள்ளி மற்றும் கல்லூரி கட்டடங்களுக்கு தற்போதுள்ள சொத்துவரியில் 75% சொத்துவரி உயர்வு செய்யலாம்.
    7. காலிமனை வரிவிதிப்பிற்கு 1 சதுர அடி நிலத்திற்கு தற்போதுள்ள அடிப்படை மதிப்பு 100 சதவீதம் உயர்வு செய்து காலிமனை வரி பொது சீராய்வு செய்யலாம்.
    8. ஏற்கனவே உள்ள சொத்துவரி / காலிமனைவரியில் ஆண்டு தோறும் 6 சதவீதம் உயர்வு அல்லது கடந்த 5 ஆண்டுகளின் மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தியின் (GSDP) சராசரி வளர்ச்சி வீதம் இவற்றில் எது அதிகமோ அதன் அடிப்படையில் ஒவ்வொரு ஆண்டும் சொத்துவரி / காலிமனை வரி உயர்வு செய்து சொத்துவரி சீராய்வு செய்யலாம்.
4. 01.04.2022 முதல் புதிய வரி விதிப்புகளுக்கு உயர்வு செய்யப்படவுள்ள சொத்து வரி மண்டல மதிப்பு

<u>சொத்து வரி</u>

| மண்டலம் | தற்போதைய மதிப்பீடு (ரூபாய்) | 600 சதுர அடிக்கும் குறைவான பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 25% சொத்துவிரி உயர்வு (1 சதுர அடிக்கு ரூபாய்) | 601–1200 சதுர அடிக்கும் குறைவான பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக் கு 50% சொத்துவிரி உயர்வு (1 சதுர அடிக்கு ரூபாய்) | 1201–1800 சதுர அடிக்கும் குறைவான பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 75% சொத்துவிரி உயர்வு (1 சதுர அடிக்கு ரூபாய்) | 1800 சதுர அடிக்கு மேல் பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக் கு 100% சொத்துவிரி உயர்வு (1 சதுர அடிக்கு ரூபாய்) | விணிகப் பயன்பாட்டுக்கு கட்டடங்களுக்கு தற்பொது உள்ள சொத்துவிரி 100% சொத்துவரி உயர்வு (1 சதுர அடிக்கு ரூபாய்) | தொழிற்சாலை பயன்பாட்டு கட்டடம் மற்றும் சுயநிதி பள்ளி மற்றும் கல்லூரி கட்டடங்களுக்கு தற்பொது உள்ள சொத்துவிரியில் 75% சொத்துவரி உயர்வு (1 சதுர அடிக்கு ரூபாய்) |
|---|---|---|---|---|---|---|---|
| A | 0.70 | 0.90 | 1.05 | 1.25 | 1.40 | 1.40 | 1.25 |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| B | 0.50 | 0.65 | 0.75 | 0.90 | 1.00 | 1.00 | 0.90 |
| C | 0.30 | 0.40 | 0.45 | 0.55 | 0.60 | 0.60 | 0.55 |

**காலிமனைவரி மண்டல மதிப்பு**

| மண்டலம் | தற்போதைய மதிப்பீடு (ரூபாய்) | பொது சீராய்வின் படி 100% காலிமனை உயர்வு (1 சதுர அடிக்கு ரூபாய்) |
|---|---|---|
| A | 0.25 | 0.50 |
| B | 0.25 | 0.50 |
| C | 0.25 | 0.50 |

5. தற்போது வரை மண்டல அடிப்படை மதிப்பு நிர்ணயம் செய்யப்படாமல் விடுவிக்கப்பட்டுள்ள சாலைகள் / தெருக்கள் / சந்துகள் ஆகியவற்றிற்கு அடிப்படை மண்டல மதிப்பு நிர்ணயம் செய்ததை மன்றம் அனுமதிக்கலாம்.
6. நகர்மன்ற தீர்மானம் நிறைவேற்றப்படும் நாளிலிருந்து கோட்டக்குப்பம் நகராட்சியில் புதியதாக சொத்துவரி / காலிமனை வரி நிர்ணயம் செய்யப்படும் அல்லது திருத்தி அமைக்கப்படும் அனைத்து வகையான கட்டிடங்களும் மன்ற தீர்மானத்தின் வகைப்படுத்தப்பட்டுள்ள மண்டலங்கள் மற்றும் அவற்றிற்கான அடிப்படை மதிப்பு எடுத்துக் கொள்ளப்பட்டு சொத்துவரி / காலிமனை வரி விதிப்பு செய்யவும் மன்றம் இறுதி ஒப்புதல் அளிக்கலாம்.

**தீர்மான எண்.19**

அரசு விதிகள் பின்பற்றி சொத்துவரி சீராய்வு மற்றும் காலிமனை வரி விதிப்பு செய்ய அனுமதிக்கப்படுகிறது.

**பொருள் எண். 02**

கோட்டக்குப்பம் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.5ல் உள்ள ராஜீவ் நகர் மெயின் தெருவில் மனையில் உள்ள சாலை மிகவும் தாழ்வான பகுதியில் அமைந்துள்ளதாலும் சேதமடைந்து இருப்பதாலும், மழைநீர் தேங்குவதாலும் நகர்மன்ற உறுப்பினர் மற்றும் பொதுமக்கள் புதிய சாலை அமைக்கவேண்டும் என கூறிய புகாரின் அடிப்படையில் ரூ.4.00 இலட்சம் மதிப்பீட்டில் பேவர் பிளாக் சாலை இந்நகராட்சியின் பொது நிதியில் அமைக்க மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும்.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மான எண்.20**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண். 03**

கோட்டக்குப்பம் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.5ல் உள்ள ராஜீவ் குறுக்கு தெரு மழைநீர் வடிகால் வசதி இல்லாமல் சாலையில் மழைநீர் தேங்குவதால் பொதுமக்களுக்கும், போக்குவரத்துக்கும் மிகுந்த இடையூறு உள்ளது என நகர்மன்ற உறுப்பினர் மற்றும் பொதுமக்கள் புகார் தெரிவித்தன் அடிப்படையில் மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் ரூ.6.50 இலட்சம் மதிப்பீட்டில் இந்நகராட்சியின் பொது நிதியில் பணியை மேற்கொள்ள மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும்.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்

**<u>தீர்மான எண்.21</u>**

அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் எண். 04</u>**

கோட்டக்குப்பம் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.5ல் உள்ள ராஜீவ் மெயின் ரோட்டில் மழைநீர் வடிகால் வசதி இல்லாமல் சாலையில் மழைநீர் தேங்குவதால் பொதுமக்களுக்கும், போக்குவரத்துக்கும் மிகுந்த இடையூறு உள்ளது என நகர்மன்ற உறுப்பினர் மற்றும் பொதுமக்கள் புகார் தெரிவித்தன் அடிப்படையில் மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் ரூ.5.60 இலட்சம் மதிப்பீட்டில் இந்நகராட்சியின் பொது நிதியில் பணியை மேற்கொள்ள மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும்.

**<u>அலுவலக குறிப்பு</u>**

மன்றம் அனுமதிக்கலாம்

**<u>தீர்மான எண்.22</u>**

அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் எண். 05</u>**

கோட்டக்குப்பம் நகராட்சிக்குட்பட்ட பகுதியில் இயங்கி வரும் மின்மோட்டார்கள் அடிக்கடி பழுது ஏற்படுவதால் குடிநீர் விநியோக பணிகள் பெரிதும் பாதிக்கப்படுகிறது. எனவே பழுதுகளை உடனடியாக சரிசெய்ய உதிரி பாகங்கள் உட்பட ஆண்டு பராமரிப்பு பணிமேற்கொள்ள தயாரிக்கப்பட்ட தோராய மதிப்பீடு ரூ.10.00 இலட்சம் மதிப்பீட்டில் இந்நகராட்சியின் பொது நிதியில் பணியை மேற்கொள்ள மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும்.

**<u>அலுவலக குறிப்பு</u>**

மன்றம் அனுமதிக்கலாம்

**<u>தீர்மான எண்.23</u>**

அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் எண். 06</u>**

கோட்டக்குப்பம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் குடிநீர் பிரதான குழாய்கள் மற்றும் பம்பிங் பிரதான குழாய்கள் சுமார் 25 வருடங்களுக்கு மேல் போடப்பட்ட குழாய்கள் ஆகும். இதில் சிமெண்ட் குழாய்கள், PVC குழாய்கள் அமைக்கப்பட்டுள்ளது. மேற்படி குழாய்கள் அவ்வப்போது பழுது ஏற்பட்டு குடிநீர் வீணாக வெளியேறி சாலையில் செல்கிறது. இதனை குடிநீர் வீணாகுவதுடன் பொது மக்களிடம் அவப்பெயர் ஏற்படுகிறது. எனவே அவ்வப்போது உடைப்பு ஏற்படும் போது உடனடியாக பழுது நீக்கம் செய்ய உதிரி பாகங்களுடன் பராமரிப்பு பணி மேற்கொள்ள ஆண்டு பழுது பராமரிப்பு பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரவும் இதற்காக தயாரிக்கப்பட்ட தோராய மதிப்பீடு தொகை ரூ.10.00 இலட்சத்திற்கு மதிப்பீட்டில் இந்நகராட்சியின் பொது நிதியில் பணியை மேற்கொள்ள மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும்.

**<u>அலுவலக குறிப்பு</u>**

மன்றம் அனுமதிக்கலாம்

**<u>தீர்மான எண்.24</u>**

அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் எண்.07</u>**

கோட்டக்குப்பம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் தெருமின் விளக்குகள் அவ்வப்போது பழுது ஏற்படுகிறது. இதனால் பல்வேறு பகுதிகளில் இருள் சூழ்ந்து காணப்படுகிறது. மேலும் இந்நகராட்சி கடற்கரையை ஒட்டி அமைந்திருப்பதால் கடற்கரை பகுதிகளில் உப்பு காற்றில் மின்விளக்குகள் செறிக்கப்பட்டு மின் விளக்குகள் மற்றும் உதிரி பொருட்கள் பழுது ஏற்படுகிறது. இதனால் பொது மக்களிடமிருந்தும், நகர்மன்ற உறுப்பினர்களிடமிருந்தும் புகார்கள் வந்த வண்ணம் உள்ளது. எனவே அவ்வப்போது ஏற்படும் பழுதுகளை சரி செய்ய உதிரி பாகங்களுடன் பராமரிப்பு பணி மேற்கொள்ள ஆண்டு பழுது பராமரிப்பு பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரவும் இதற்காக தயாரிக்கப்பட்ட தோராய மதிப்பீடு தொகை ரூ.9.90 இலட்சத்திற்கு மதிப்பீட்டில் இந்நகராட்சியின் பொது நிதியில் பணியை மேற்கொள்ள மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும்.

<u>அலுவலக குறிப்பு</u>

மன்றம் அனுமதிக்கலாம்

**<u>தீர்மான எண்.25</u>**

அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் எண்.08</u>**

கோட்டக்குப்பம் நகராட்சிக்குட்பட்ட கிழக்கு கடற்கரை சாலை (பைபாஸ் சாலை) கேபிள் பேனல் போர்டு பழுதடைந்து இருப்பதால், மின்விளக்கு எரியாமல் இருள் சூழ்ந்து காணப்படுகிறது. இதனால் தினந்தோறும் விபத்துக்கள் ஏற்பட்டு வருகிறது. இதனை கருத்தில் கொண்டு UG கேபிள் மற்றும் பேனல் போர்டுகள் ரூ.7.50 இலட்சத்திற்கு தோராய மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்படி பணியினை இந்நகராட்சி பொதுநிதியில் மேற்கொள்ளவும், நிர்வாக அனுமதிக்கும், தொழில்நுட்ப அனுமதிக்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

மன்றம் அனுமதிக்கலாம்

**<u>தீர்மான எண்.26</u>**

அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் எண்.09</u>**

கோட்டக்குப்பம் நகராட்சிக்குட்பட்ட கிழக்கு கடற்கரை சாலை (பைபாஸ் ரோடு) வடகிழக்கு பருவமழையினால் மின்விளக்குகள் சேதமடைந்து இருப்பதால் மின் விளக்குகள் எரியாததால் இரவு நேரங்களில் அடிக்கடி பெரிய விபத்துகள் ஏற்பட்டு பொதுமக்களிடம் தொடர்ந்து புகார்கள் இந்நகராட்சிக்கு வரப்படுகிறது. இதனை கருத்தில் கொண்டு மேற்படி இடத்தினை நேராய்வு செய்து 120 W LED எரியாத மின்விளக்குகளை மாற்றிட ரூ.9.80 இலட்சத்திற்க்கு தோராய மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்படி பணியினை இந்நகராட்சி பொதுநிதியில் மேற்கொள்ளவும், நிர்வாக அனுமதிக்கும், தொழில்நுட்ப அனுமதிக்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

மன்றம் அனுமதிக்கலாம்

**<u>தீர்மான எண்.27</u>**

அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் எண்.10</u>**

கோட்டக்குப்பம் நகராட்சிக்குட்பட்ட வார்டு–6ல் எம்.ஜி.ஆர் நகர் ஒத்தவாடை ஓடை அருகில் உள்ள பாலம் வடகிழக்கு பருவமழையினால் மிகவும் சேதமடைந்து இருப்பதால் பொதுமக்கள் அவதிப்படுகின்றனர். இதனை கருத்தில் கொண்டு சேதமடைந்துள்ள பாலத்தை புதுப்பிக்க தயாரிக்கப்பட்ட தோராய மதிப்பீடு தொகை ரூ.9.90 இலட்சத்திற்க்கு பணியினை இந்நகராட்சி பொதுநிதியில் மேற்கொள்ளவும், நிர்வாக அனுமதிக்கும், தொழில்நுட்ப அனுமதிக்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

மன்றம் அனுமதிக்கலாம்

**<u>தீர்மான எண்.28</u>**

அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் எண்–11</u>**

கோட்டக்குப்பம் நகராட்சி 9.59சதுர கிலோ மீட்டர் பரப்பளவில் 34899 மக்கள் தொகையுடன் 8981 குடியிருப்புகளுடன் 27 வார்டுகளை கொண்ட வளர்ந்து வரும் நகரப்பகுதியாகும். இந்நகராட்சிக்குட்பட்ட அனைத்து குடியிருப்புப் பகுதிகள், வணிக நிறுவனங்கள் ஆகியவற்றில் நாள் ஒன்றுக்கு 6 முதல் 8 டன் வரை குப்பையை இப்பகுதிவாழ் மக்களால் வெளியேற்றப்படுகிறது. இவற்றை இந்நகராட்சி துப்புரவு பணியாளர்கள் கொண்டு கையாளுவது மிக சிரமமாக உள்ள காரணத்தால் தினசரி பொது மக்களால் உற்பத்தி செய்யப்படும் திடக்கழிவுகளை மக்கும் கழிவுகள், மக்காத கழிவுகள் என பிரித்து வாங்குதல், ஹாட் ஸ்பாட்டுகளிலிருந்து எடுத்து வரப்படும் திடக்கழிவுகளை பிரித்தல், வளம் மீட்பு பூங்காவில் இயற்கை உரம் மற்றும் மண்புழு உரம் தயார்செய்தல், பொது மக்களிடையே திடக்கழிவு திறந்த வெளியில் மலம் கழிக்காமல் கழிவறைகளை பயன்படுத்துதல் மற்றும் அரசின் இதர திட்டங்கள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்துதல் போன்ற பணிகளை ஒப்பந்த அடிப்படையில் திறம்பட செய்யும் பொருட்டு மகளிர் சுய உதவிக்குழு உறுப்பினர்களை கொண்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது. மேலும் இந்நகராட்சியில் 14 நிரந்தர துப்புரவு பணியிடங்கள் மட்டுமே உள்ளன. இப்பணியாளர்களை கொண்டு பொது சுகாதார பணிகள் மற்றும் திடக்கழிவு மேலாண்மை பணிகளை சிறந்த முறையில் செய்ய இயலவில்லை. ஆகையால் மகளிர் சுய உதவிக்குழு உறுப்பினர்கள் மூலம் சிறப்பான முறையில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. எனவே கீழ்க்காணும் குழுவில் உள்ள நபர்களுக்கு நாள் ஒன்றுக்கு கீழ்க்காணும் விபரப்படி தொகை வழங்கப்பட்டு வருகிறது.

| வ. எண் | மகளிர் சுய உதவிக்குழு | பணி விபரம் | நபர் –1க்கு நாள் 1க்கு |
|---|---|---|---|
| 1 | 1.பாரிஜாதம் மகளிர் சுயஉதவிக்குழு,<br>2.தாமரை மகளிர் சுயஉதவிக்குழு,<br>3.முல்லைமகளிர் சுய | திடக்கழிவு மேலாண்மை மேற்பார்வை பணி | ரூ.390/– |
| | | திடக்கழிவு மேலாண்மை வீடு வீடாக சென்று குப்பைகளை | ரூ.270/– |

| | | | |
|---|---|---|---|
| | உதவிக்குழு,<br>4.சாமந்தி மகளிர் சுயஉதவிக்குழு, | சேகரிக்கும் பணி | |
| | | கழிவறை பராமரிப்பு பணி | ரூ.270/- |
| | 5.ஒற்றுமை ஆண்கள் சுய உதவிக்குழு | வடிகால் பணி மற்றும் பொது சுகாதார பணிகள் | ரூ.390/- |
| | | ஓட்டுநர் | ரூ.440/- |

தற்போது பணி சுமை அதிகமாக இருப்பதால் ஒப்பந்த தொகையினை உயர்த்தி வழங்க மகளிர் சுய உதவிக்குழு உறுப்பினர்கள் கடிதம் அளித்துள்ளனர் ஆகையால் திடக்கழிவு மேலாண்மை பணி மற்றும் பொது சுகாதார பணியின் முக்கியத்துவத்தை கருத்தில் கொண்டு அட்டவணையில் குறிப்பிட்டுள்ளபடி ஒப்பந்த தொகையினை வழங்க மன்றத்தின் பார்வைக்கும் , அங்கீகாரத்திற்கும்.

| வ. எண் | மகளிர் சுய உதவிக்குழு | பணி விபரம் | நபர் -1க்கு நாள் 1க்கு |
|---|---|---|---|
| 1 | 1.பாரிஜாதம் மகளிர் சுயஉதவிக்குழு,<br>2.தாமரை மகளிர் சுயஉதவிக்குழு,<br>3.முல்லை மகளிர் சுய உதவிக்குழு,<br>4.சாமந்தி மகளிர் சுயஉதவிக்குழு, | திடக்கழிவு மேலாண்மை மேற்பார்வை பணி | ரூ.420/- |
| | | திடக்கழிவு மேலாண்மை வீடு வீடாக சென்று குப்பைகளை சேகரிக்கும் பணி | ரூ.310/- |
| | | கழிவறை பராமரிப்பு பணி | ரூ.310/- |
| | 5.ஒற்றுமை ஆண்கள் சுய உதவிக்குழு | வடிகால் பணி மற்றும் பொது சுகாதார பணிகள் | ரூ.420/- |
| | | ஓட்டுநர் | ரூ.470/- |

<u>அலுவலக குறிப்பு</u>

மன்றம் அனுமதிக்கலாம்

**<u>தீர்மான எண்.29</u>**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்-12**

கோட்டக்குப்பம் பேரூராட்சி சாதாரணக்கூட்ட தீர்மான எண்.342 நாள்.28.06.2019ல் கோட்டக்குப்பம் பேரூராட்சி அலுவலக எதிரில் உள்ள அண்ணா திடலில் தற்காலிகமாக ஆவின் பாலகம் அமைத்துக்கொள்ள அனுமதி வேண்டி திரு.விஜயபாஸ்கரன் த/பெ முனுசாமி என்பவரின் விண்ணப்பத்தின் மிது உரிய விதிமுறைகளை பின்பற்றி செயல்படுத்திட அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. தற்போது உரிய விதிமுறைகளை பின்பற்றாமல் மேற்கண்ட இடத்தில் ஆவின் பாலகம் செயல்பட்டு வருகிறது. மேற்கண்ட ஆவின் பாலகத்தால் பொதுமக்களுக்கும், போக்குவரத்துக்கும் இடையூறாக உள்ளதாக புகார் மனுக்கள் வரப்பெற்றுள்ளது. அரசு வழிகாட்டு நெறிமுறைகளை பின்பற்றாமல் செயல்படும் ஆவின் பாலகத்தை அகற்றவும், தனி அலுவலரின் தீர்மான எண்.342, நாள்.28.06.2019-ஐ இரத்து செய்ய மன்றத்தின் அனுமதிக்கு.

அலுவலக குறிப்பு

மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மான எண்.30**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்–13**

கோட்டக்குப்பம் நகராட்சி எல்லைக்குட்பட்ட இசிஆர் புறவழிச்சாலை நெடுஞ்சாலை துறையினரால் விரிவாக்கம் செய்யப்பட்டுள்ளது. இதனால் புறவழிச்சாலையிலிருந்து குடியிருப்புகளுக்கு செல்லும் இணைப்பு சாலை மிகவும் தாழ்வாக இருப்பதால் விபத்துக்கள் ஏற்படுகிறது. ஆகையால் மன்ற உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள் புகார் அளித்து வருகின்றனர். ஆகையால் இதனை சரி செய்யும் பொருட்டு புறவழிச்சாலையில் இணையும் குறுக்கு சாலைகளுக்கு சாய்வு தளத்தினை இந்நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் பார்வைக்கும், அங்கீகாரத்திற்கும்.

அலுவலக குறிப்பு

மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மான எண்.31**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்–14**

கோட்டக்குப்பம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் நமக்கு நாமே திட்டம் 2021–22ன் கீழ் பொது மக்களின் நலன் கருதி இருள் சூழ்ந்துள்ள பகுதியில் புதியதாக உயர்கோபுர மின்விளக்கு அமைக்க தனியார் பங்களிப்பாக ரூ.7.00 இலட்சம் மற்றும் அரசு பங்களிப்பாக ரூ.14.00 இலட்சம் மொத்தம் ரூ.21.00 இலட்சம் மதிப்பீட்டில் கீழ்காணும் இடங்களில் LED மின் விளக்குகள் மற்றும் ஆழ்துளை கிணறுகளுடன் கூடிய பைப்லைன் அமைக்கும் பணியினை மேற்கொள்ள மன்றத்தின் பார்வைக்கும், அங்கீகாரத்திற்கும்.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டு ரூ. இலட்சத்தில் |
|---|---|---|
| 1 | வார்டு எண்.2, ஆரோவில் மெயின் ரோடு (பெரியபாளையத்து அம்மன் கோயில்) அருகில் உயர்கோபுர மின்விளக்கு (12m Height mini mast with 6 No's of 150W LED Fitting) அமைக்கும் பணி | 4.00 |
| 2 | வார்டு எண்.3, பெரியமுதலியார்சாவடி காலனி பகுதியில் உயர்கோபுர மின்விளக்கு (12m Height mini mast with 6 No's of 150W LED Fitting) அமைக்கும் பணி | 4.00 |
| 3 | வார்டு எண்.13, சின்னகோட்டக்குப்பம், ஆதிதிராவிடர் காலனி பகுதியில் உயர்கோபுர மின்விளக்கு (12m Height mini mast with 6 No's of 150W LED Fitting) அமைக்கும் பணி | 4.00 |
| 4 | வார்டு எண்.17, பஜார் வீதி, மாமூலப்பை தெரு சந்திப்பில் உயர் கோபுர மின்விளக்கு (12m Height mini mast with 6 No's of 150W LED Fitting) அமைக்கும் பணி | 4.00 |
| 5 | வார்டு எண்.26, மரைக்காயர் தெரு– III பள்ளிவாசல் அருகில் உயர் கோபுர மின்விளக்கு (12m Height mini mast with 6 No's of 150W LED Fitting) அமைக்கும் பணி | 4.00 |
| 6 | வார்டு எண்.27, சோதனைக்குப்பம் சமுதாய கழிவறைக்கு புதிய ஆழ்துளை | 1.00 |

| | | |
|---|---|---|
| | கிணறு மற்றும் பைப்லைன் அமைத்தல் | |
| | மொத்தம் | 21.00 |

<u>அலுவலக குறிப்பு</u>

மன்றம் அனுமதிக்கலாம்.

<u>தீர்மான எண்.32</u>

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்–15**

கோட்டக்குப்பம் பேரூராட்சி நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டுள்ளதால் அனைத்து தரவுகளும் UTIS மென்பொருள் மூலம் செயல்படுத்த நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் வேலூர் அவர்களின் ந.க.எண்.652/2022/சி1, நாள்.28.02.2022ன்படி செயல்படுத்திட அறிவுறுத்தப்பட்டதற்கிணங்க, கோட்டக்குப்பம் நகராட்சியில் UTIS மென்பொருள் செயல்படுத்த புதியதாக இரண்டு கணினிகள், இரண்டு Dot Mattrix Printer மற்றும் பொறியியல் பிரிவிற்கு ஒரு கணினி மற்றும் Colour Printer ரூ.394214/– மதிப்பீட்டில் கொள்முதல் செய்துக்கொள்ள மன்றத்தின் பார்வைக்கும், அங்கீகாரத்திற்கும்.

<u>அலுவலக குறிப்பு</u>

மன்றம் அனுமதிக்கலாம்

<u>தீர்மான எண்.33</u>

அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண்.16</u>

கோட்டக்குப்பம் சிறப்புநிலை பேரூராட்சி தற்போது இரண்டாம் நிலை நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டுள்ளதால், தற்போது கோட்டக்குப்பம் நகராட்சியில் UTIS மென்பொருள் செயல்படுத்தப்பட்டு வருவதால் வரி வசூல் பணிகள், கட்டிட உரிமம் மற்றும் இதர வசூல் இனங்கள் வசூல் செய்வதற்கு சிரமமாக உள்ளது. ஆகையால் பேரூராட்சி மூலம் வரி வசூல் பணிக்கு பயன்படுத்தப்படும் e–Town Panchayat மென்பொருள் மூலம் வரி வசூல் பணிகளை மேற்கொள்ள ஏதுவாகவும், 2021–2022ம் ஆண்டுக்கான தரவுகளை பெறவும் e–Town Panchayat மென்பொருள் நிறுவனத்திற்கு செலுத்தவேண்டிய நிலுவைத்தொகை ரூ.260780/– மட்டும் இந்நகராட்சி பொதுநிதியில் செலுத்த மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும்

<u>அலுவலக குறிப்பு</u>

மன்றம் அனுமதிக்கலாம்

<u>தீர்மான எண்.34</u>

வரி வசூல் பணிகள் மட்டும் அத்தியாவசிய பணிகள் பாதிப்பதை கருத்தில் கொண்டு உரிய நிறுவனத்திற்கு தொகை வழங்க அனுமதி அளிக்கப்படுகிறது.

**பொருள் எண்–17**

தமிழகத்தில் தற்போது கொரோனா தொற்று பரவிவருவதால் அதனை கட்டுப்படுத்தும் விதமாக தமிழக அரசின் உத்திரவின்படி, கோட்டக்குப்பம் நகராட்சி பகுதியில் சுகாதார துறை மூலம் ஒவ்வொரு வாரமும் கொரோனா நோய் மெகா தடுப்பு ஊசி முகாம் நடைபெற்று வருகிறது. இம்முகாமில் பணிபுரியும் மருத்துவர்கள் மற்றும்

பணியாளர்களுக்கு இந்நகராட்சி பொது நிதியில் உணவு வழங்கும் செலவினங்களை மேற்கொள்ள மன்றத்தின் பார்வைக்கும் அங்கீகாரத்திற்கும்.

அலுவலக குறிப்பு

மன்றம் அனுமதிக்கலாம்

தீர்மான எண்.35

அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண்.18

கோட்டக்குப்பம் நகராட்சியில் குடிநீர் விநியோகத்திற்கு பயன்படுத்தப்படும் குடிநீர் பைப்லைன்கள் 108.966 கி.மீ நீளத்திற்கு அமையப்பட்டுள்ளது. மேலும் 14 மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகள் மற்றும் 3 தரைத்தள தொட்டிகள் அமையப்பட்டுள்ளது. இவற்றில் ஏற்படும் பைப்லைன் உடைப்புகளை சரி செய்ய நிரந்தர பணியாளர் எவரும் இல்லாத காரணத்தினால் தனியார் நிறுவனத்தின் மூலம் பைப்லைன் உடைப்புகள் சரி செய்தல் மற்றும் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வந்தது தற்போது அவர்களுக்கு வழங்கப்படும் தொகை அபரிதமாக உள்ளது என தணிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளதால் மகளிர் சுய உதவிக்குழு மூலம் 1 பிளம்பர் மற்றும் 3 உதவியாளர்கள் கொண்டு பணிகளை மேற்கொள்ளவும் அவர்களுக்கான தொகை PWD Shedule Of Rate–க்கு மிகாமல் இந்நகராட்சி பொதுநிதியில் தொகை வழங்கவும், மன்றத்தின் பார்வைக்கும், அங்கீகாரத்திற்கும்.

| வ. எண் | மகளிர் சுய உதவிக்குழு | பணி விபரம் | நபர் –1க்கு நாள் 1க்கு |
|---|---|---|---|
| 1 | ஒற்றுமை ஆண்கள் சுய உதவிக்குழு | பிளம்பர் | ரூ. 710/– |
| 2 | | உதவியாளர் | ரூ. 680/– |

அலுவலக குறிப்பு

மன்றம் அனுமதிக்கலாம்

தீர்மான எண்.36

குடிநீர் அத்தியாவசிய பணிகளை கருத்தில் கொண்டு பைப்லைன் உடைப்புகளை உடன்குடன் சரி செய்ய ஆண்கள் சுய உதவிக்குழு உறுப்பினர் மூலம் பணி மேற்கொண்டு தொகை வழங்க அனுமதிக்கப்பட்டுள்ளது.

பொருள் எண்.19

மார்ச்–2022 செலவு சீட்டு எண் 972 முதல் 1001 வரை மற்றும் ஏப்ரல்–2022 01 முதல் 20 வரை உள்ள செலவுசீட்டுகள் மன்றத்தின் பார்வைக்கும் அங்கீகாரத்திற்கும்.

# 3/2022 மாத செலவுசீட்டு விபரம்

| வ. எண் | செலவு சீட்டு எண் | நாள் | செலவின்விபரம் | தொகை |
|---|---|---|---|---|
| 1. | 972 | 08.03.2022 | ஒப்பந்தப்பணியாளர் ஊதியம் வழங்கியது 2/2022 | 112996.00 |
| 2. | 973 | 08.03.2022 | திடக்கழிவு மேலாண்மை மகளிர் சுய உதவிக்குழு ஊதியம் 2/2022 | 630680.00 |
| 3. | 974 | 08.03.2022 | டெங்கு மஸ்தூர் ஊதியம் 2/2022 | 79475.00 |
| 4. | 975 | 08.03.2022 | கழிவறை பராமரிப்பாளர் ஊதியம் 2/2022 | 20250.00 |
| 5. | 976 | 08.03.2022 | நகராட்சி பணியாளர்கள் ஊதியம் 2/2022 | 453558.00 |
| 6. | 977 | 08.03.2022 | திடக்கழிவு மூன்று சக்கர தள்ளுவண்டிகள் சீர் செய்தல் | 268773.00 |
| 7. | 978 | 08.03.2022 | வரி வசூல் வாகனத்திற்கு புதிய பேட்டரி மற்றும் வாடகை பேட்டரி கட்டணம் செலுத்தியது | 16856.00 |
| 8. | 979 | 08.03.2022 | ஈமச்சடங்கு மான்ய தொகை வழங்கியது | 5000.00 |
| 9. | 980 | 08.03.2022 | ஈமச்சடங்கு மான்ய தொகை வழங்கியது | 5000.00 |
| 10. | 981 | 08.03.2022 | ஈமச்சடங்கு மான்ய தொகை வழங்கியது | 5000.00 |
| 11. | 982 | 08.03.2022 | தேர்தல் பணிக்கு பதிவேடுகள் மற்றும் எழுது பொருட்கள் வழங்கியது | 38926.00 |
| 12. | 983 | 08.03.2022 | மன்ற உறுப்பினர்கள் பதிவேற்பு நிகழ்சிக்கு மேடை மற்றும் இதர ஏற்பாடுகள் செய்தல் | 79502.00 |
| 13. | 984 | 08.03.2022 | தேர்தல் வீடியோ கவரேஜ் எடுத்தது | 174930.00 |
| 14. | 985 | 08.03.2022 | பணியாளர் கூட்டுறவு சொசைட்டி பிடித்தம் செய்யப்பட்ட தொகை வழங்கியது 2/2022 | 101594.00 |
| 15. | 986 | 09.03.2022 | தொழில்நுட்ப உதவியாளர் ஊதியம் வழங்கியது 2/2022 | 28323.00 |
| 16. | 987 | 09.03.2022 | ரஹமத் நகர் அல்லா பிச்சை தெரு சந்திப்பில் சிறுபாலம் அமைத்தல் | 219890.00 |
| 17. | 988 | 09.03.2022 | நகர்ப்புற உள்ளாட்சி தேர்தல் பணிக்கு படிவங்கள் மற்றும் தேர்தல் பொருட்கள் வாங்கியது | 194898.00 |
| 18. | 989 | 09.03.2022 | சின்னகோட்டக்குப்பம் இருளர் காலனி பகுதியில் புதியதாக 20HP மின்மோட்டார் வாங்கியது | 220000.00 |
| 19. | 990 | 09.03.2022 | நகராட்சி பகுதியில் குடிநீர் பராமரிப்பு பணிக்கு பயன்படுத்தப்பட்டு வரும் மின்மோட்டார்கள் பழுதுபார்த்தல் பணிக்கு தொகை வழங்கியது | 730697.00 |
| 20. | 991 | 09.03.2022 | வாக்கு எண்ணும் மையம் மற்றும் வாக்குச்சாவடிகளுக்கு பராமரிப்பு பணி மேற்கொண்டது | 577007.00 |
| 21. | 992 | 09.03.2022 | இந்நகராட்சி பகுதியில் பழுதான தெருமின் விளக்குகளை புதியதாக மாற்றியது மற்றும் உதிரி பொருட்கள் வழங்கியது | 881122.00 |
| 22. | 993 | 09.03.2022 | தேர்தல் பணிக்கு டெண்ட், மின்விளக்கு பேரிகார்டு மற்றும் இதர செலவினங்கள் அமைத்தல் | 858704.00 |

| வ. எண் | செலவு சீட்டு எண் | நாள் | செலவின்விபரம் | தொகை |
|---|---|---|---|---|
| 23. | 994 | 09.03.2022 | பொது சுகாதார பணிக்கு பயன்படுத்தப்பட்டு வரும் வாடகை டிராக்டர் தொகை வழங்கியது | 711148.00 |
| 23. | 995 | 09.03.2022 | பொது சுகாதார பணிக்கு பயன்படுத்தப்பட்டு வரும் பேட்டரி வாகனங்களுக்கு புதியதாக ஜார்ஜர் வாங்கியது | 33565.00 |
| 24. | 996 | 10.03.2022 | இந்நகராட்சி பகுதிகளில் உள்ள பொது கழிவறை தொட்டிகள் சுத்தம் செய்தது | 25872.00 |
| 25. | 997 | 28.03.2022 | நகர்புற உள்ளாட்சி தேர்தல் 2022 தேர்தல் பணிக்கு தேவையான கணினிகள் மற்றும் பிரிண்டர்கள் வழங்கியது மற்றும் உதிரிபாகங்கள் வழங்கியது | 100202.00 |
| 26. | 998 | 29.03.2022 | நகர்புற உள்ளாட்சி தேர்தல் 2022 தேர்தல் பணிக்கு தேவையான கிருமி நாசினி வழங்கியது | 148470.00 |
| 27. | 999 | 30.03.2022 | நகர்புற உள்ளாட்சி தேர்தல் 2022– மாற்றுத்திறனாளிகளுக்கு இரண்டு சக்கர தள்ளுவண்டிகள் வழங்கியது | 103723.00 |
| 28. | 1000 | 31.03.2022 | மார்ச் - 2022 மன்ற கூட்ட அமர்வுபடி வழங்கியது | 16200.00 |
| 29. | 1001 | 31.03.2022 | நகர்புற உள்ளாட்சி தேர்தல் 2022 தேர்தல் பணிக்கு தேவையான கோவிட் –19 பாதுகாப்பு உபகரணங்கள் வழங்கியது | 134750.00 |

## 4/2022 மாத செலவுசீட்டு விபரம்

| வ. எண் | செலவு சீட்டு எண் | நாள் | செலவின்விபரம் | தொகை |
|---|---|---|---|---|
| 01. | 01 | 04.04.2022 | நகராட்சி பணியாளர்கள் ஊதியம் 3/2022 | 456061.00 |
| 02. | 02 | 04.04.2022 | பணியாளர் கூட்டுறவு சொசைட்டி பிடித்தம் செய்யப்பட்ட தொகை வழங்கியது 3/2022 | 101091.00 |
| 03. | 03 | 07.04.2022 | திடக்கழிவு மேலாண்மை மகளிர் சுய உதவிக்குழு ஊதியம் 3/2022 | 689520.00 |
| 04. | 04 | 07.04.2022 | ஒப்பந்தப்பணியாளர் ஊதியம் வழங்கியது 3/2022 | 118317.00 |
| 05. | 05 | 07.04.2022 | கழிவறை பராமரிப்பாளர் ஊதியம் 2/2022 | 20250.00 |
| 06. | 06 | 07.04.2022 | ஏப்ரல் - 2022 மன்ற கூட்ட அமர்வுபடி வழங்கியது | 16200.00 |
| 07. | 07 | 13.04.2022 | தேர்தல் பணிக்கு பேலட் பேப்பர் வாங்கியது | 35906.00 |
| 08. | 08 | 13.04.2022 | திறந்த வெளியில் மலம் கழித்தல் ODF குறித்து மாலை மலரில் விளம்பரம் செய்தது | 3150.00 |
| 09. | 09 | 13.04.2022 | திறந்த வெளியில் மலம் கழித்தல் ODF குறித்து தினமலரில் விளம்பரம் செய்தது | 3520.00 |
| 10. | 10 | 21.04.2022 | தேர்தல் பணிக்கு – வாக்காளர் பட்டியல் வெளியிடப்பட்டது | 60145.00 |
| 11. | 11 | 21.04.2022 | பொது சுகாதார பராமரிப்பு பணிக்கு பயன்படுத்தப்படும் வாகனம் மற்றும் ஜெனரேட்டர்களுக்கு எரிபொருள் வாங்கியது | 101724.00 |
| 12. | 12 | 22.04.2022 | ரம்ஜான் பண்டிகைக்கு முன்பணம் வழங்கியது | 20000.00 |
| 13. | 13 | 26.04.2022 | டெங்கு மஸ்தூர் ஊதியம் 3/2022 | 58378.00 |
| 14. | 14 | 26.04.2022 | இந்நகராட்சி பகுதிகளில் உள்ள பொது கழிவறை தொட்டிகள் சுத்தம் செய்தது | 103488.00 |
| 15. | 15 | 26.04.2022 | தூய்மை இந்தியா திட்டத்திற்கு கீழ் விழிப்புணர்வு பேனர் | 32242.00 |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | அச்சடித்தது | |
| 16. | 16 | 26.04.2022 | பொது சுகாதார பணிக்கு பயன்படுத்தப்பட்டு வானங்கள் சீர் செய்தது | 7500.00 |
| 17. | 17 | 26.04.2022 | பொது சுகாதார பணிக்கு பயன்படுத்தப்பட்டு வானங்களுக்கு டயர் வாங்கியது | 17738.00 |
| 18. | 18 | 26.04.2022 | பொது சுகாதார பணிக்கு பயன்படுத்தப்பட்டு வரும் வாடகை ஜேசிபிக்கு தொகை வழங்கியது | 172375.00 |
| 19. | 19 | 26.04.2022 | பொது சுகாதார பயன்பாட்டிற்கு தேவையான கிருமி நாசினி வாங்கியது | 323645.00 |
| 20. | 20 | 28.04.2022 | 3/2022 மாத மின் கட்டணம் செலுத்தியது | 2119305.00 |

<u>அலுவலக குறிப்பு</u>

மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மான எண்.37</u>**

மார்ச் 2022 வங்கி செலவு சீட்டு எண் 972 முதல் 1001 வரை மற்றும் ஏப்ரல் 2022 வங்கி செலவுச்சீட்டு எண் 1 முதல் 20 வரை அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

(ஒம்) ச.ஜெயமூர்த்தி

நகர் மன்ற தலைவர்

கோட்டக்குப்பம் நகராட்சி

// உண்மை நகல்//

ஆணையாளர்,

கோட்டக்குப்பம் நகராட்சி